தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 278/மா/2023**

**நாள்: 18.10.2023**

திரு.எஸ்.சங்கரநாராயணன்,
ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸஸ் பி.லிட்.,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திருநெல்வேலி மாநகராட்சி – எதிர்மனுதாரர்

சென்னை, அசோக் நகர், 15வது அவென்யு, எண்.33, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. எஸ்.சங்கரநாராயணன், ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸஸ் பி.லிட், என்பவரின் 19.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.09.2023–ல் பெறப்பட்டு, 278/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, அசோக் நகர், 15வது அவென்யு, எண்.33, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. எஸ்.சங்கரநாராயணன், ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸஸ் பி.லிட், என்பவர் தனது 19.09.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" We. Srinivas Waste Management Services Pvt. Ltd., have participated in the Tirunelveli Corporation Tender vide Notification. H2/11932/2016 dt. 31.01.2017 for the work "Cleaning and Sanitation work of Toilets, Buildings and Campus of Corporation Schools, Government & Panchayat Union Schools within Tirunelveli Zone Corporation Limit" for a period of one year and been awarded for the same for all four zones of Tirunelveli Corporation such as Thachanallur Zone, 16 Schools, Palayamkottai zone-7 schools, Melapalayam Zone-10 schools and Tirunelveli zone-12 schools total 45 schools for a period of one year. Later, we are given extension for the said work for a period of two years i.e. from 10.07.2018 to 07.09.2020 and

accordingly we have rendered our service to the satisfaction of the School Headmasters and Corporation Officials.

The Tirunelveli Corporation had issued a letter on 27.01.2020 stating an amount of Rs,73,84,386 is kept withheld from the amount which will be spent for the purpose of Salary for the period from January 2019 to December 2019 citing the AG audit report.

It is mentioned that during the inspection done by the Office of the Principal Accountant General (General & Social Sector Audit), Chennai in Tirunelveli Corporation for the period 2017-18, has submitted a report vide Lr.No.Pr.AG(G&SSA)-SS II/LB III/ I/ L21-125/2018-19/43 dt. 15.05.2019 that irregular payment of Rs.21.87 lakhs and undue benefit of Rs.45.31 lakhs which is altogether of Rs. 73,84,386/- lakhs to the contractor for maintenance of school premises.

We would like to bring to your kind attention of the Hon'ble Sir, Tamil Nadu Local Bodies Ombudsman, in the Tender Notification of Tirunelveli Corporation the contract period is mentioned in Years. Moreover, in the Tender conditions that issued along with the notifications, " it is clearly mentioned that work should be performed for all days and respective attendance record should be maintained and Headmasters approval should be obtained for claiming the monthly salary".

It is nowhere in the Tender conditions mentioned that the sanitation work should be performed only on the school working days. This being an essential service, it is instructed that the school toilets should be cleaned one hour before the school starts and after lunch hours daily as per work schedule. Hence it is clearly mentioned that school toilets and building premises should be kept clean at all days.

But, in the Inspection Report submitted by Office of the Principal Accountant General (General & Social Sector Audit ), Chennai in Tirunelveli Corporation for the period 2017-18, had submitted a report vide Lr.No.Pr.AG(G&SSA)-SS II/LB III/ I/ L21-125/2018-19/43 dt. 15.05.2019, it is mentioned that academic year would be 240 days, but the tender estimate is prepared for 365 days by Tirunelveli Corporation and hence for those days beyond 240 days, the charges for the workers and Supervisors that claimed will be deducted.

Normally, the sanitation work will be performed on all days including Sundays and hence the Tirunelveli Corporation have calculated the tender value accordingly. Even, the Headmasters have requested the Tirunelveli Commissioner to instruct us to work in April and May months which is school annual holidays and accordingly we have obtained the acknowledgement from respective schools for claiming the monthly bill.

Thus, we have rendered our service as per the tender conditions and worked on all days including the Annual Holidays in all the Tirunelveli Corporation's awarded schools and have paid the statutory respectively for all the months.

Now, the Tirunelveli Corporation, had withheld an amount of Rs. 73,84,386/- (Rupees Seventy three lakhs eighty four thousand three hundred and eighty six only) citing the AG report which we are not responsible.

Hence our humble submission to the Hon'ble Sir, Tamil Nadu Local Bodies Ombudsman, to kindly intervene our situation as the Tirunelveli Corporation had kept withheld our worker's salary in lieu of their fault of miscalculating the tender.

Our request to Hon'ble Sir to provide justice and recover the total outstanding dues Rs.81,29,386/- (Rupees Eighty one lakhs twenty nine thousand three hundred and eighty six only) which includes the withheld amount of Rs.73,84,386/- and our Performance Security Deposit of Rs. 7,45,000/- " என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 26.09.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3)** இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை **06.10.2023** அன்று திருநெல்வேலி முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு **26.09.2023** நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**4) மனுதாரர் 06.10.2023 அன்று திருநெல்வேலி முகாமில் நடைபெறும் நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:**

திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட மாநகராட்சி மற்றும் ஊராட்சிப் பள்ளிகளிலும் திருநெல்வேலி மாநகராட்சியில் கழிப்பிடங்களில் துப்புரவுப்பணிகளை மேற்கொள்ளவும் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொண்டு 2016ம் ஆண்டும், மேலும் 2017 முதல் 2020ம் ஆண்டு வரையிலும் எங்களது சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சாவீசஸ் நிறுவனம் பணிகளை மேற்கொண்டது. மேற்கண்ட பணிகளை மேற்கொண்டவகையில் எங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய ஒப்பந்தத்தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பள்ளிகள் இயங்கிய நாட்களில் மட்டுமே துப்புரவுப் பணிகளை மேற்கொண்டிருக்க வேண்டும் என தணிக்கை தடையில் குறிப்பிட்டுள்ளதால் எங்களுக்கு மேற்கண்ட நிலுவைத்தொகையை அளிக்கவில்லை என தெரிய வருகிறது. பள்ளிகள் ஞாயிற்றுக்கிழமைகளில் இயங்காது என்றாலும், தினமும் பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளில் துப்புரவுப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். எனவே, எங்கள் நிறுவனத்தால் ஆண்டு முழுவதும் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனவே, மேற்கண்ட காலகட்டத்தில் எங்களால் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான நிறுத்திவைக்கப்பட்ட தொகையான ரூபாய் **73,84,386/–** மற்றும் பாதுகாப்புத் தொகை (Performance Security Deposit) ரூபாய் **7,45,000/–** ஆகமொத்தம் எங்கள் நிறுவனத்திற்கு சேரவேண்டியத் தொகை ரூபாய் **81,29,386/–**ஐ திருநெல்வேலி மாநகராட்சியால் அளித்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறைமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட எனது **19.09.2023** நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**5) திருநெல்வேலி மாநகராட்சியின் பொது சுகாதார அலுவலர் 06.10.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

" மனுதாரரான சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சாவீஸஸ் என்கின்ற நிறுவனம் திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட மாநகராட்சி மற்றும் ஊராட்சிப் பள்ளிகளிலும், திருநெல்வேலி மாநகராட்சியில் கழிப்பிடங்களில் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டது. துப்புரவுப்பணிகள் மேற்கொண்டதில் சில குறைபாடுகளை AG அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைத்தொடர்ந்து அவருக்கு சேர வேண்டிய தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இம்முறைமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 06.10.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) திருநெல்வேலி மாநகராட்சி பொது சுகாதார அலுவலர் தனது 06.10.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-**

" அரசாணை எண்.27, பள்ளி கல்வித்துறை, நாள் 13.04.2015 மற்றும் அரசாணை எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23.11.2016–ன்படி, மாநகராட்சி பகுதிகளுக்கு உட்பட்ட அரசு பள்ளிகள், மாநகராட்சி பள்ளிகள் மற்றும் ஊராட்சிப் பள்ளிகளில் கழிவறைகளை சுத்தம் செய்யவும், பள்ளிகளை சுத்தமாக வைத்துக்கொள்ளவும் தனியார் மூலம் பணிகள் மேற்கொண்டு அதற்கான செலவினத்தை சொத்து வரியில் பிடித்தம் செய்யப்படும் கல்வி நிதியிலிருந்து வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மான எண்.21,22,23,24 நாள். 31.01.2017ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த M/s. Srinivasa Waste Management Services(p) Ltd.–க்கு மாமன்ற தீர்மான எண்.17, 18, 19, 20 நாள்.28.04.2017ன்படி மாமன்ற தீர்மானம் நிறைவேற்றி துப்புரவு பணிகளை மேற்கொள்ள வேலை ஆணை எண்.எச்.2/11932/2016 நாள்.27.06.2017ன்படி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தின் பணிகள் திருப்திகரமாக உள்ளன என்ற சுகாதார அலுவலர்களின் சான்றின்படி, மாமன்ற தீர்மான எண்.114,115,116, 117 நாள்.29.10.2018ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு 10.07.2017 முதல் 09.07.2020 வரை 2 ஆண்டுகாலம் நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாநில முதன்மை தலைமை கணக்காயர் அவர்களின் அறிக்கை A.S.No.24, தணிக்கை சீட்டுபடி, M/s. Srinivasa Waste Management Service (p) Ltd.–க்கு கூடுதலாக தொகை (Administrative charges + service charges) வழங்கப்பட்டள்ளதாக குறிப்பிடப்பட்டு தணிக்கை தடை எழுப்பப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்தொகை ஜனவரி 2019 முதல் வழங்கப்படாமல் இருந்து வந்தது. தற்போது தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கூடுதலான தொகை ரூ.10,76,920/– ஐ 30.09.2019 தேதிய பட்டியலின்படி, அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகையில் பிடித்தம் செய்யப்பட்டுவிட்டது. உடனிகழ் தணிக்கை திருநெல்வேலி மாநகராட்சி 2017–2018 தணிக்கை அறிக்கை கல்வி நிதி பத்தி எண்.14ல் M/s.Srinivasa Waste Management Service (p) Ltd.க்கு பள்ளி விடுமுறை நாட்களுக்கும் சேர்த்து தொகை வழங்கப்பட்டதாக தெரிவித்து ரூ.73,84,386/–. நிதியிழப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு பள்ளிகளில் சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள வழங்கிய அனுமதி 09.07.2020

தேதியுடன் முடிவடைய உள்ளது எனவும், மேற்படி நிறுவனத்திற்கு ஜனவரி 2019 முதல் ஊதியம் வழங்குவது குறித்தும் 09.07.2020 வரை பணியை தொடர அனுமதிப்பது குறித்தும், இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் தெளிவுரை வழங்க வேண்டி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.எச்.2/11932/2016 நாள் 26.12.2019ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. துணை இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் கடிதம் ந.க.எண்.அ1/445/2019, நாள். 13.01.2020 கடிதத்தில் 2017–18 கல்வி நிதி தணிக்கை அறிக்கை பத்தி எண்.17–ன்படி, கூடுதலாக வழங்கப்பட்ட ஊதிய தொகையை M/s. Srinivasa Waste Management Service(P) Ltd. நிறுவனத்திடமிருந்து பிடித்தம் செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 2019 முதல் டிசம்பர் 2019 வரை இந்நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய மொத்த ஊதியத்தொகை ரூ.1,13,96,644/–ல் வருமான வரி 2% மற்றும் TDS 2% பிடித்தம் செய்ய வேண்டிய தொகை ரூ.4,55,868/– போக நிகரத் தொகை ரூ.1,09,40,776/– தணிக்கை தடை எழுப்பப்பட்டுள்ள நிதியிழப்புத் தொகை ரூ.73,84,386/– நிறுத்தி வைக்கப்பட்டு மீதமுள்ள தொகை ரூ.35,56,390/– செலவு சீட்டு எண்.70 நாள் 28.01.2020ன்படி M/s. Srinivasa Waste Management Service (P) Ltd. நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தணிக்கை பத்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிதியிழப்புத்தொகை ரூ.73,84,386/– M/s.Srinivasa Waste Management Service (P) Ltd. ஞாயிறு மற்றும் கோடைகால விடுமுறை நாட்களும் சேர்த்து 365 நாட்களுக்கும் தவறாக கணக்கிடப்பட்டு பட்டியல் சமர்ப்பித்துள்ளதால் தணிக்கை தடையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ரூ.73,84,386/– வழங்க இயலாத நிலை உள்ளது.

M/s.Srinivasa WasteManagement Service(P) Ltd. நிறுவனம் திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் அவர்களிடம் நேரடியாக தணிக்கை தடைநிவர்த்தி செய்து பிடித்தம் செய்யப்பட்ட ரூ.73,84,386/–ஐ விடுவிக்க விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளலாம்" எனதெரிவித்துள்ளார்.

**7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், திருநெல்வேலி மாநகராட்சி பொது சுகாதார அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

மனுதாரர் 2016ம் ஆண்டும், மேலும் 2017 முதல் 2020ம் ஆண்டு வரையிலும் எங்களது சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் செய்துள்ள பணிகளுக்கான நிறுத்திவைக்கப்பட்ட தொகையான ரூபாய் 73,84,386/– மற்றும் பாதுகாப்புத் தொகை (Performance Security Deposit) ரூபாய் 7,45,000/– ஆகமொத்தம் எங்கள் நிறுவனத்திற்கு சேரவேண்டிய தொகை ரூபாய் 81,29,386/–ஐ திருநெல்வேலி மாநகராட்சியால் அளித்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கோரியுள்ளார்.

திருநெல்வேலி மாநகராட்சி சுகாதார அலுவலர், சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சாவீஸஸ் என்கின்ற நிறுவனம் திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட மாநகராட்சி மற்றும் ஊராட்சிப் பள்ளிகளிலும், திருநெல்வேலி மாநகராட்சியில் கழிப்பிடங்களில் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டது. துப்புரவுப்பணிகள் மேற்கொண்டதில் சில குறைபாடுகளை AG அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைத் தொடர்ந்து அவர்களுக்கு சேர வேண்டிய தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் மாநகராட்சி பகுதிகளுக்கு உட்பட்ட அரசு பள்ளிகள், மாநகராட்சி பள்ளிகள் மற்றும் ஊராட்சிப் பள்ளிகளில் கழிவறைகளை சுத்தம் செய்யவும், பள்ளிகளை சுத்தமாக வைத்துக்கொள்ளவும் தனியார்மூலம் பணிகள் மேற்கொண்டு அதற்கான செலவினத்தை சொத்து வரியில் பிடித்தம் செய்யப்படும் கல்வி நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. அதன்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த M/s. Srinivasa Waste Management Services (p) Ltd.–க்கு துப்புரவு பணிகளை மேற்கொள்ள வேலை ஆணை 27.06.2017ல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தின் பணிகள் திருப்திகரமாக உள்ளன என்ற சுகாதார அலுவலர்களின் சான்றின்படி மீண்டும் 10.07.2018 முதல் 09.07.2020 வரை 2 ஆண்டுகாலம் அனுமதி நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது. மாநில முதன்மை தலைமை கணக்காயர் அவர்களின் அறிக்கை A.S.No.24, தணிக்கை சீட்டுப்படி, M/s. Srinivasa Waste Management Service (p) Ltd.–க்கு கூடுதலாக தொகை (Administrative charges + service charges) வழங்கப்பட்டள்ளதாக குறிப்பிடப்பட்டு தணிக்கை தடை எழுப்பப்பட்டுள்ளது. உடனிகழ் தணிக்கை திருநெல்வேலி மாநகராட்சி 2017–2018 தணிக்கை அறிக்கை கல்வி நிதி பத்தி எண்.14ல் M/s.Srinivasa Waste Management Service (p) Ltd.க்கு பள்ளி விடுமுறை நாட்களுக்கும் சேர்த்து ஊதியத்தொகை வழங்கப்பட்டதாக தெரிவித்து ரூ.73,84,386/– நிதியிழப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. துணை இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் கடிதத்தில் கல்வி நிதி தணிக்கை அறிக்கை பத்தி எண்.17–ன்படி, கூடுதலாக வழங்கப்பட்ட ஊதிய தொகையை M/s. Srinivasa Waste Management Service(P) Ltd. நிறுவனத்திடமிருந்து பிடித்தம் செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 2019 முதல் டிசம்பர் 2019 வரை இந்நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய மொத்த ஊதியத்தொகை ரூ.1,13,96,644/–ல் வருமான வரி 2% மற்றும் TDS 2% பிடித்தம் செய்ய வேண்டிய தொகை ரூ.4,55,868/– போக நிகரத் தொகை ரூ.1,09,40,776/– தணிக்கை தடை எழுப்பப்பட்டுள்ள நிதியிழப்புத் தொகை ரூ.73,84,386/– நிறுத்தி வைக்கப்பட்டு மீதமுள்ள தொகை ரூ.35,56,390/– செலவு சீட்டு எண்.70 நாள் 28.01.2020ன்படி M/s. Srinivasa Waste Management Service (P) Ltd. நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தணிக்கை பத்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிதியிழப்புத்தொகை ரூ.73,84,386/– M/s.Srinivasa Waste Management Service (P) Ltd. ஞாயிறு மற்றும் கோடைகால விடுமுறை நாட்களும் சேர்த்து 365 நாட்களுக்கும் தவறாக கணக்கிடப்பட்டு பட்டியல் சமர்ப்பித்துள்ளதால் தணிக்கை தடையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ரூ.73,84,386/– வழங்க இயலாத நிலை உள்ளது என தெரிவித்துள்ளார்.

ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் என்கின்ற நிறுவனம் திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மைப்பணி மேற்கொண்டவகையில் தங்களுக்கு திருநெல்வேலி மாநகராட்சியிடமிருந்து வரவேண்டிய நிலுவைத்தொகையினை மாநகராட்சி வழங்கிட ஆவண செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொண்டுள்ளது. ஆனால் மாநில முதன்மை கணக்காயர் (Principal Accountant General) அவர்களின் தணிக்கை அறிக்கையின்படி திருவாளர்கள் ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் என்கின்ற நிறுவனத்திற்கு கூடுதலாக தொகை வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டு தணிக்கைத்தடை எழுப்பப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட மாநில முதன்மை தலைமை கணக்காயரின் தணிக்கை அறிக்கையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு திருநெல்வேலி

மாநகராட்சியால் கூடுதலாக தொகை வழங்கப்பட்டதாக தணிக்கை தடை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிலையில், மனுதாரரின் கோரிக்கை குறித்து திருநெல்வேலி மாநகராட்சிக்கு இம்முறைமன்றத்தால் ஆணை ஏதும் வெளியிட இயலாது என கருதி இத்துடன் முடித்து வைத்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S. சங்கரநாராயணன்,
ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸஸ் (P) லிட்,
எண்.1, A. நவரங்க் அபார்ட்மென்ட்ஸ்,
எண்.85, குமரப்பா தெரு,
நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.

2) ஆணையர்,
திருநெல்வேலி மாநகராட்சி,
திருநெல்வேலி.

3) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை – 600 035.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028

5) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
7/9